ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

# ஆர்யதர்மம்.

विवेको जन्तूनां प्रभवति जनिष्वेव बहुषु
प्रसादादैशाद्बहुसुकृतपाकोदयवशात् ।
यतस्तस्मादेव त्वमपि परमार्थावगमने
कृतारम्भः पुंसामिदमिह विवेकस्य तु फलम् ॥

सर्ववेदान्तसिद्धान्ते ।

உலகில் மானிடப்பிறவியைப் பெற்றவர்களுக்குப் பலஜன்மங்களில் செய்யப்பட்ட நற்கர்மங்கள் பலனாக ஸ்ரீ பரமேசுவரருடைய பிரஸாதத்தால் அறிவென்பது உண்டாகிறது. ஆகையால் ஹே நண்பனே, இந்தச் சிறந்த ஞானத்தைக் கொண்டு நீயும் உண்மையான பரம்பொருளை அறிய வேண்டியதற்கு முயற்சி செய்யவேண்டும். மனிதர்கள் அதிகப் புண்யவசத்தால் ஞானத்தையடைந்தால் பரமாத்ம ஸ்வரூபத்தை அறிந்து மோக்ஷஸுகத்தைப்பெறுவதே அதற்குப் பயனாகும்.

தற்காலம் நம்மால் அனுபவிக்கப்படும் ஸம்ஸார துக்கங்களிலிருந்தும் விடுபடவேண்டுமானால், பகவானுடைய அனுக்கிரகமின்றி முடியாது. அவருடைய அனுக்கிரகத்தைப் பெறுவதற்கு அதிகாரி பேதத்தைக் கொண்டு சாஸ்திரங்களில் பலஸாதனங்கள் கூறப்பட்டிருந்தாலும் முக்கியமான ஸாதனம் ஞானமேயாகும். எவர் எவ்விதமான ஸாதனத்தை அனுஷ்டித்தாலும், முடிவில் ஞானத்தைப் பெற்று அதினால் தான் மோக்ஷத்தை யடைய வேண்டுமென்பது சாஸ்திரங்களின் ஸித்தாந்தம். இந்த அபிப்பிராயத்தையே பகவான்.

ज्ञानिनो हि मम प्रियः । ज्ञानवान् मां प्रपद्यते ।

என்கிற பல வசனங்களால் கீதாசாஸ்திரத்திலும் வெளியிட்டிருக்கிறார். இவ்விதம் பகவத் ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தைப் பெறுவதற்கு முக்கிய ஸாதனமான ஞானத்தைப் பெற்ற நாம் நச்வரமான விஷயங்களைப் பெரிதாய்க் கருதி காலத்தை வீண்பண்ணாமல் அதற்குற்றபயனை யடைவதில் முயற்சிகொள்ள வேண்டியது முக்கியம் என்று ஒரு மஹான் உபதேசிக்கிறார்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

குரோதன-௵ கார்த்திகை-௴ ௨௰௨

## 1. கர்ப்பாதானத்தின் காலநியமம்.

இந்தக் கர்ப்பாதானத்திற்கே ருதுஸமாவேசன மென்றும், ஸமாவேசனமென்றும் மற்றப்பெயர்களுமுண்டு. இதற்குக்காலநியமம்அவசியமென்று முன்னர்க் கூறினோம். அதனை இங்குவிவரிப்பாம். துவிஜாதிகளுள் ப்ரம்மசரியாசிரமத்திலிருந்தே வைராக்கியம் பெறாத காமுகர் (ஆசையுள்ளவர்) களுக்குத் தான் கிரஹஸ்தாச்சிரமம்பெற அதிகாரம் விதிக்கப்படுகின்றது. அந்த ஆச்சிரமத்தை அடைந்தவுடனே ப்ரம்மசரியா சிரமத்தில் ரிஷிகளது கடனைத் தீர்க்கவேண்டியவனானது போலவே தேவர்கள் பிதிருக்கள் இவர்களுடைய கடன்களையும் தீர்க்கவேண்டியவனாகிறான். அவற்றிற்காக யாகாதிகள் செய்தால் தேவர்கடன்நீங்கிவிடுவதாகவும், நல்ல புத்திரனைப் பெற்றால் பிதிருக்களின் கடன் நீங்குவதாகவும் சுருதிஸ்மிருதிகளில் போதிக்கின்றபடியால் யாகாதிகளை அவசியம் செய்ய வேண்டும். புத்திராத்நினத்தையும்பெற முயல வேண்டும். யாகாதிகளைச் செய்ய வேண்டியமுறை 20-வது ஸம்ஸ்காரம் முதல் விவரிக்கப்படும். ஸத்புத்திரனை யடையவேண்டுமானால் வைதிகஸம்ஸ்கார முறைப்படி விவாகம் செய்துகொண்ட தன்னுடைய தர்மபத்னியிடமிருந்தே யடையவேண்டும். பிறனுடைய ஸ்திரீயை அவனிருக்கும் பொழுதேனும், மரித்தபிறகேனும், கனவிலும் நினைக்கக் கூடாது.

அங்ஙனமே வியாஸர்:—

**परदारान्नगच्छेत्तु मनसाऽपि कथञ्चन ।**

**परदाररतिः पुंसामुभयत्रापि भीतिदा ॥**

इति मत्वा स्वदारेषु ऋतुमत्सु बुधो व्रजेत् ।

"பிறனுடைய பத்தினியை மனத்தாலும் நினைக்கக்கூடாது. அந்நிய ஸ்திரீயிடம் ஆசைவைப்பது மனிதர்களுக்கு இஹத்திலும் பரத்திலும் பயத்தைத்தரும்' என்றெண்ணியே அறிந்தவனுயுள்ளவன் தனது பத்தினீயிடமே ருதுகாலத்திற் சேரவேண்டும்."

என்று கூறுகின்றார். இதனால் விதவா விவாகம் செய்ய வேண்டி அம்முறையை ஸ்தாபிக்க முயலுவோர் ஜனங்களுக்குப்பல விதத்திலும் தீமையை விளைவிக்கப் பாடுபடுகின்றார். என்பதைச் சாஸ்திரம் ஸ்பஷ்டமாய்க் கூறுகின்றது. இவ்விஷயம் பிரகிருதமில்லாததால் விடுத்தோம். கீழ்க்காட்டிய வசனத்தில் "ருதுகாலத்தில்" என்று குறிக்கப்பட்டமையால் காலநியமமென்பதில் ருதுகாலமுமொன்றும். ருதுகாலமென்பது 16 தினங்களாம். அவற்றுள் வீட்டிற்கே ஆகாமல் விலகிஇருக்க வேண்டிய மூன்று நாளும், வைதிககர்மத்திற்குக்கூட இருக்கஉதவாத நன்காவதுநாளுமாக நான்கு தினங்கள். தவிர, மற்றப் பன்னிரண்டு தினங்கள் ருதுஸமாவேசனத்திற்கு முக்கிய காலமாம். அதிலும் 11-வது நாளும், 13-வது நாளும் அவ்வளவு சிறந்தன அல்ல. ஆகவே, 10-நாட்கள் மிகச்சிறந்தவைகளாம். இரட்டைப்பட்டநாளில் புருஷப்பிரஜையும், ஒற்றைப்பட்டநாளில் ஸ்திரீப்பிரஜையும் ஜனிக்குமாம். அதனால், ருதுகாலம் முதலாவது நான்கு தினங்களும் 11-13-வது தினங்களும் நீக்கி மற்ற இரட்டைப்பட்டநாள் புருஷப்பிரஜையை விரும்பியவனுக்கு ஸமாவேசனத்திற்குச் சிறந்த காலம். அதிலும் 6-வது நாளைவிட 8-வது நாளும், அதைவிட 10-வது நாளும் இம்மாதிரி மேல் மேல்வரும் இரட்டைப்பட்டநாள் மிகச்சிறந்ததாம். முதலாவன ஸமாவேசனத்திற்குத் திதிவார நக்ஷத்திராதிகளை விசேஷமாய்க் கவனிக்க வேண்டும். இதன் விரிவு ஜ்யோதிட சாஸ்திரத்தின் முகூர்த்தக்கிரந்தங்களில் கூறப்படுகின்றது. அதிற் சில விசேஷங்களை இங்குக் கூறுவாம். ஷஷ்டி, அஷ்டமீ, பூர்ணிமை, அமை, சதுர்த்தி, சதுர்த்தசி ஆகிய இரண்டு பக்ஷங்களிலுமுள்ள திதிகள் தவிர மற்றதிதிகளும், திங்கள், புதன், வியா

மூன், வெள்ளி ஆகிய வாரங்களும், திருவோணம், ரோஹிணீ, ஹஸ்தம், அனுஷம்,ஸ்வாதீ, ரேவதீ,மூலம், உத்திரம் உத்திராடம், உத்திரட்டாதி, சதயம்,ஆகிய நக்ஷத்திரங்களும், விருஷபம், மிது னம், கடகம், ஸிம்மம், கன்னி, துலாம், தனுசு, கும்பம், மீனம் இந்த ராசிகளும், முதலாவது ஸமாவேசனத்திற்கு நல்ல நாட்க ளாம். புனர்பூசம், பூசம், மிருகசிர்ஷம், அவிட்டம், அசுவதீ, சித் திரை இந்த நக்ஷத்திரங்கள், மத்தியமங்கள். மற்ற நக்ஷத்திரங் கள் கூடா. நிஷேகலக்கினமும் அதற்கு 8-வது ராசியும் ஒரு கிர ஹமுமில்லாமலிருக்க வேண்டும். நிஷேகலக்கினாதிபதி சுபனாக வும், பலிஷ்டனாகவும், அனுகூலனாகவு மிருக்கவேண்டும். மற்றும் சோதிட சாஸ்திரத்தில் குறிக்கப்படும்விசேஷங்களையும் கவனித்து நல்ல நாளில் நல்ல முகூர்த்தத்தில் செய்யப்படும் ஸமாவேசனம் தான் இஹலோகத்திற் கனுகூலனும், லோகாந்தரங்களுக்குஹி தனையும், எந்தப் பிதுருக்களின் கடனை நிவர்த்திக்க வேண்டுமோ அந்தப் பிதிருக்களுக்கு அந்தக் கடன் நிவர்த்திக்கும்படியாக்கிச் சந்தோஷத்தை யுண்டுபண்ணுகின்றவனுமுள்ள புத்திரரத்தினம் ஜனிக்கக் காரணமாகும். நாள்பாராமல்செய்தால் இதற்கெல்லாம் விபரீதமாய் பிறப்பான். அதனால் பெற்றோருக்குமின்பமில்லை. பிதுருக்களுக்கும் பிரீதியில்லை. கடனும் நீங்காது. தற்காலத்தில் அத்தகைய காலநியமத்தை யனுஸரிக்காமல் செய்த ஸமாவேச னத்தின் பயனாகை.

**संकरस्य च कर्ता स्यामुपहन्यामिमाः प्रजाः ।**

(காலநியமப்படி விதிக்கப்பட்ட கர்மங்களைச்செய்யாமல்விடு வேனாகில் உலகமே கெட்டுவிடும்) ஜாதிஸாங்கரியத்தை (கல ந்து விடுவதை)ச் செய்தவனாய் விடுவேன். (அதனால்) இந்த பிரஜைகளைக் கெடுத்தவனாய் விடுவேன்.

என்று எந்தஜாதிஸாங்கரியதோஷத்தில் பகவானேபயந்து நடுங்கு கின்றாரோ, அந்த தோஷத்தைத்துணிந்து செய்ய முன்வருபவர் களான அனேகம் பிராணிகள் நம்பாரதநாட்டிலும் பாவும்படியான தௌர்பாக்கியம் நம்மவர்க்கு நேர்ந்தது வியசனிக்கத்தக்கதே. ஆகையால் ஸநாதந தர்மத்தைக் கைப்பற்றியுள்ள துவிஜாதிகள் இந்த நியமத்தை அவசியம் ஆதரிக்கவேண்டும். முதலாவது

ஸமாவேசனத்திற்போலவே பிற்பட்டுள்ள மற்ற ஸமாவேசனங்களிலும் திதி வாராதி நியமங்களுண்டு. அவையாவன—அமை, பௌர்ணிமை, இரண்டு பக்ஷங்களிலுமுள்ள சதுர்த்தசீ, அஷ்டமீ, ஸங்கிராந்தி புண்ணிய காலம் ஆகிய இவ்வைந்து பர்வங்களும், ஷஷ்டி, துவாசியும், ஜன்மானுஜன்மத்திரி ஜன்ம நக்ஷத்திரங்களும்; மன்வாதி, யுகாதி சிராத்தகாலங்களும் மஹாளயபக்ஷம் 15 நாளும், மாதிரு பிதிரு சிராத்ததினங்களும்; மூல நக்ஷத்திரமும், மகாநக்ஷத்திரங்களும், வியதீபாத, வைதிருதியோகங்களும், ஏகாதசி முதலிய உபவாஸ தினங்களும்; ஸோமவாராதி விருத காலங்களும், பானுவாரமும்கூடாது. இவ்வாறு விதிக்கப்பட்ட நாட்களில் இரவுகாலந்தான் கிரஹிக்கத்தக்கது. அதனுற்றான்.

**नार्तवे दिवा व्रजे दल्प वीर्याश्च दिवा प्रसूयन्तेऽल्पायुषश्चेति ।**

"ருதுகாலத்திலும் பகற்காலங்கூடாது அப்பொழுதானால் ஜனிக்கின்ற பிரஜைகள் அற்பவீர்ய முள்ளவைகளாகவும், அற்பமான ஆயுளுள்ளவைகளாவும் ஆகின்றன."

என்று சங்கலிகித ஸ்மிருதியில் பகற்காலம் நிஷேதிக்கப்படுகின்றது. ஆதர்வண சுருதியிலும்" பகற்காலத்தில் ஸமாவேசனம் செய்தவன், தனது பிராணனையே மாய்த்துக் கொள்ளுகிறான்" என்று கூறப்படுகின்றது. விதிக்கப்பட்ட நாட்களில் இரவு காலமானால் இந்த தோஷமில்லாததோடு "அவனைப்ராம்மசாரியென்றே கூறலாம். அவனது ப்ராம்மசரியத்திற்கு யாதொரு ஹானியுமில்லை" என்று புகழப்படுகின்றது. இதனால் புத்திரகாமனையுள்ளவன் ருதுகாலத்தில் இரட்டைப்பட்ட விதிக்கப்பட்டநாளில் இரவில் ஸமாவேசனம் செய்யவேண்டு மென்று ஏற்பட்டது. இது போலவே வைத்திய சாஸ்திரத்திலும் காலநியமம் கூறப்படுவதோடு மற்றோர் விசேஷமும் கூறப்படுகின்றது. அதாவது—"மானிடசரீரோத்பத்திக்கு மாதா பிதாக்களின் சுக்கிலம், சோணிதமெனப்படும் தாதுக்களே காரணம் அவற்றுள் சுக்கிலம் அதிகப்பட்டால் புருஷப்பிரஜை, சோணிதமதிகப்பட்டால் ஸ்திரீப்பிரஜை" என்பது ஆதலால் புத்திரகாமனை யுள்ளவனுக்கு அந்த தாது விருத்திகரமான ரஸாயனங்கள் வாஜீகரணமென்னும் பிரகாணத்தில் விதிக்கப்படுகின்றன.

ஆர்யதர்மம் பத்திராதிபர்.

# ஸஹபோஜநவிசாரம்.

ஆரியர்காள், காலத்தின் மாறுதலால் நாநாவிதமான ஆபத்துக்கள் எற்பட்டுத் தேசத்தில் தனம், வித்தியை, ஆயுஸ், சுகம், இவைகள் குறைந்து எல்லோரும் சிரமத்தை அடைவதினால், இந்த சிரமம் எதை அனுஷ்டித்தால் நிவிருத்தியாகுமென்று மேதாவிகளான ஒவ்வொருவரும் ஆலோசித்துத் தகுந்த பரிஹாரத்தைச் செய்ய முயற்சிக்கவேண்டியதுதான். ஆனால் அந்த முயற்சியில் எது எதால் உண்டாகுமோ அந்தக்காரிய காரணபாவத்தை நிச்சயம் செய்துகொண்டு முயற்சித்தால் காரியம் நிச்சயமாக கைகூடும். அந்த நிச்சயம் இல்லாமல் யத்தனம் செய்தால் எதிர்பார்க்கும் பலம் கிடைக்காததோடு விபரீத பலமும் எற்பட்டுவிடும். இப்போது தேசத்துக்குண்டான சங்கடங்களுக்கு மூலகாரணம் வர்ணாசிரம விபவஸ்தையோடுப் பிரகாசித்த வைதிகதர்மத்துக்குக் காமக்ரோதாதிகளால் எற்பட்ட லோபம்தானென்று வைதிகர்களின் அபிப்பிராயம். எந்த தர்மானுஷ்டானத்தால் லோகமானது முந்தி ஆயுர்விருத்தி வித்தியாவிருத்தி முதலிய சகல க்ஷேமத்தோடு விளங்கினதோ எந்த தர்மத்தை ரட்சிக்கப் பிராசீன ராஜாக்கள் பூர்ணமான கவலையை வகித்தார்களோ அந்த சிரேயோஹேவான தர்மத்தை அவலம்பிக்காவிடில் பிற தெளிந்த உபாயங்களும் பூர்ணமான க்ஷேமத்தை உண்டு பண்ணாதென்பது நிச்சயம். வேரை ரட்சிக்காதவரையில் மரம் நிலைக்காது. வேரில் கிருமிகள் எற்பட்டால் மரத்தில் இலைகள் வாடும். செழுமை குறையும் புஷ்பம் எற்படாது. அதற்குச்சிகிச்சை செய்யாதாவரையில் மரம் பட்டுப்போய்விடும். இந்த விதமே பிரபஞ்சமென்னும் மரத்திற்குச் சநாதன தர்மமே வேராகயிருக்கிறது. அந்த வேறுக்கு கிருமிகளாகத் தர்மவிரோதிகள் எற்பட்டுக் கெடுக்கின்றமையினால் லோகம் நாளுக்குநாள் அனேக சங்கடங்களை அடைந்து சிரமத்தை அனுபவிக்கும்படியாகநேருகிறது. அதற்குச் சிகித்ஸையாக சநாதன தர்மத்திற்கு எற்படும் தொந்திரவுகளை ஆஸ்திகர்கள் ஒற்றுமையாயிருந்து எந்த உபாயத்தினால் நிவிருத்தி செய்

யக்கூடுமோ அதைச் செய்து நிவிருத்தி செய்தால்தான் க்ஷேமம் ஏற்படும். சரகஸம்ஹிதையில் காற்றின் தோஷத்தாலும் ஜலத்தின் தோஷத்தாலும், காலத்தின் தோஷத்தாலும், தேசங்களையே நாசம் செய்யக்கூடிய பயங்கரமான வியாதிகள் உண்டாகுமென்று நிர்ணயம் செய்யும் பிரகரணத்தில் காலத்திற்கு தோஷம் எந்தக் காரணத்தால் ஏற்படுமென்றுகேட்கும்போது அதர்மத்தாலேயே காலத்திற்கு தோஷம் ஏற்படுகின்றதென்றும் எந்த ஸமயத்தில் ஜனங்கள் வர்ணாசிரம தர்மங்களில் சிரத்தையை அடையவில்லையோ அரசர்களும் கவனிக்காமலிருக்கிறார்களோ, அந்த சமயத்தில் அதர்மம் தலையெடுத்து தர்மத்தை மறையும்படி செய்து தேவதைகளுடைய அனுக்கிரகம் ஏற்படாமல் அறியமுடியாத பல வியாதிகளின் உத்பத்தியாகி லோக முழுமையும் சங்கடத்தை அடையுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையால் எந்தவிதமாயும் धर्मे सर्वं प्रतिष्ठितम् என்று ஸகலத்திற்கும் காரணமான தர்ம விருத்தி எப்படி ஏற்படுமோ, அதற்குத் தகுந்த உபாயங்களைச் செய்தால் நிச்சயம் க்ஷேமம் உண்டாய்விடும். ஜகத்குரு காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஆசார்யாளுடைய அனுக்கிரகமூலமாய் நடந்துவரும் ஆரியதர்மம் என்னும் இப்பத்திரிகை மூலமாக அடிக்கடி சநாதனதர்ம விஷயங்களைப் பண்டிதர்கள் எழுதிவருவதால் அனாசாரப் பிரவர்த்தகர்களுடைய துஷ்ட உபதேசத்தால் கலங்கின சில ஆஸ்திகர்கள் மனசு மாறுதலடைந்து தர்மானுஷ்டானத்தில் சிரத்தை அடைந்திருப்பது அனுபவசித்தம். பிரும்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்களால் வெளியிடப்பட்ட "ஜாதிநிர்ணயம், சண்டாளஜாதி தத்துவநிருபணம்" என்னும் புஸ்தகங்கள் பிரபல பிரமாணமூலம் தத்துவத்தைப் பிரகாசம் செய்கின்றமையால் அனேகம் பேர்கள் மனசிலிருந்த சந்தேகத்தைவிட்டு வியவஸ்தையோடு தர்மானுஷ்டானம்செய்வார்களென்று நம்புகிறேன். ஜகத்குரு ஆசாரியாள் சநாதன தர்மாட்சணமே ஆவசியகமானதாகத் தீர்மானம் செய்துகொண்டு சர்வப்பிரகாரத்தினாலும் அதற்கு வேண்டிய காரியங்களையே செய்து வருகிறார்கள். ஆசாரியாளுடைய சரணாரவிந்த ஸ்மரணத்துடன் எந்தக் காரியத்தைச் சங்கல்பித்தாலும் அது நிர்விக்கினமாய்

பூர்த்தியடையும். ஆதலால் ஆஸ்திகர்களான எல்லாப் பண்டிதர்களும் ஒற்றுமையாக

**न जातु कामान्न भयान्न लोभात्त्यजेद्धर्मं जीवितस्यापि हेतोः ।**

"இஷ்டவஸ்துவைப் பெறவேண்டுமென்கிற அவாவையும் பயத்தையும் லோபத்தையும், பிராணனைப் பாதுகாப்பதையும் காரணமாகக்கொண்டு, ஒருக்காலும் தர்மத்தைக் கைவிடக் கூடாது" என்றும் சுலோகார்த்தத்தை அனுஷ்டானத்தால் வெளிப்படுத்தி இந்த சமயம் அனேக சமாதானங்களினால் வெளியிடப்படும் வேத விருத்தமான அபிப்பிராயங்களைக் கண்டனம் செய்து என்னைப் போலுள்ளவர்களுடைய மனதிற்கு நிச்சய புத்தி உண்டாகும்படி செய்யக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இப்பொழுது ஒவ்வொரிடத்திலும் தேசக்ஷேமார்த்தம் செய்யக்கூடிய காரியங்களை ஆலோசிக்கசமாஜம் கூடி தர்மதத்துவம் அறியாதவர்களும், அதில் நம்பிக்கை இல்லாதவர்களும், பிரமாண சிரேஷ்டமான சுருதி ஸ்மிருதிகளை நம்பாதவர்களும் அவரவர்கள் புத்தியில் தோன்றியபடி தீர்மானம் செய்து ஸ்பரிசிக்கத்தகாத ஜாதியே கிடையாது. எல்லோரும் சேர்ந்து போஜனம் செய்வதுதான் ஒற்றுமைக்குக் காரணம் மதாந்திரப்பிரவேசத்தினால் பதிதர்களாக ஆனவர்களை மறுபடியும் நம் மதத்தில் சேர்த்துவிடவேணும். அதில் விசேஷப் பிரவர்த்தியுள்ள ஆரியஸமாஜீயர்கள் லோகரக்ஷணதுரந்தரர்கள் என்று இதரர்களையும் பிரமிக்கச் செய்கிறார்கள். பண்டிதர்களென்று தாங்களாகவே நினைத்துக்கொண்டு கலியின் விவர்த்தர்களான சிலபேர்களும் அதற்கு ஒற்றுமையாக சுருதிஸ்மிருதிகள் பிரமாண கிரந்தங்களாக இருந்தபோதிலும் அதில் ஜாதிபேதத்திற்கும் மேல் கீழென்பதற்கும் வசனம் கிடையாது. சண்டாள ஜாதியை ஸ்பரிசிக்கக்கூடாதென்பது தவறு என்று தூர்வாஸனாதி வசனத்தினால் வியவகரிக்கிறார்கள். இவைகளினால் அனேகம் பேர்களுக்குப் புத்தியில் கலகம் ஏற்படுமானதினாலும் தாங்களாகவே சாஸ்திரத்தை நிச்சயம் செய்துகொள்ள ஆனுகூல்யம் இல்லாததனாலும் சாஸ்திரஞானம்பெற்ற ஆஸ்திகசிகாமணிகளான பண்டிதர்களுடைய யுக்தியுக்தமாயும் பிரமாணகௌரவமுள்ள வசன பலத்தினால் தான் க்ஷேமம் உண்டாகவேணுமென்று ஆஸ்திகர்களுடைய எண்ணம்.

மேலும் நாஸ்திகர்களாக இருந்தும் ஆஸ்திகர்களைப்போல்
அபிநயம் செய்து கொண்டு பிரமாண பூதமான சுருதி ஸ்மிருதி
களைக் கொண்டுதான் தாங்களும் லோகக்ஷேமார்த்தம் பிராசீன
வியுவஸ்தையை மாத்தவேணுமென்று சொல்வதாகச் சொல்லி
ஆபாஸமான வசனங்களையும் ஆபாஸமான யுக்திகளையும் சொல்லி
காகப் பொன்போல் இதரர்களையும் பிரமிக்கச்செய்யும் நவீன நாக
ரீகர்களுடையவாதம் சநாதனதர்மத்தில் பூர்ணமான நம்பிக்கை
யுடன் அனுஷ்டானம் செய்துவரும் விவேகிகளின் மனதைக் கல
க்கமுடியாமல் போனாலும் மற்றவர்களுக்குச் சங்கையை உண்டு
பண்ணக்கூடுமானதினால் அவர்களுடைய வாதம்சாஸ்திரவிருத்த
மென்பதை மாத்திரம் சங்கிரகமாய்ச் சில விஷயங்களில் சொல்
கிறேன். முதலில் ஸஹபோசன விஷயத்தை விசாரிப்போம்.
அதில் ஸஹபோசனம் என்பது சேர்ந்து சாப்பிடுவதென்று எற்
படுவதினால் ஸமான ஜாதியர்களோடு சேர்ந்து சாப்பிடுவதையும்
குறிக்கும் ஆனாலும் பிரகிருதத்தில் விஜாதீயர்களோடு சேர்ந்து
போசனம் செய்தால்தான் தேசத்திற்கு க்ஷேமம் எற்படுமென்று
திருத்தக் காரர்களுடைய அபிப்பிராயமானதினால் விஜாதீயர்க
ளோடு சேர்ந்து போஜனம் செய்யும் விஷயத்தை மாத்திரம் விசா
ரிக்கிறேன். ஸஜாதீயர்களோடு சேர்ந்து போஜனம் செய்வதி
லும் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கும் நியமங்களைப் பிந்தி
தெரிவிக்கிறேன். முதலில் போஜனமென்னுமகிரியையினால் எற்
படும். பலத்தை விசாரிப்போம். சுருதி ஸ்மிருதிகளின் பிராமாண்ணி
யத்தை அங்கீகரிக்காமல் யுக்தியை மாத்திரம் அவலம்பிக்கிறவர்
களுடைய அனுஷ்டானம் ஆஸ்திகர்களுக்கு அத்தியந்த விருத்தம்
அதிலும் தர்மாதர்ம விஷயத்தில் சுருதி ஸ்மிருதிகள்தான் பிரமா
ணம். யுக்திக்கு அவகாசம் கிடையாது. இந்த விஷயத்தை இன்
னொரு சமயத்தில் பிரமாண மூலகமாய் யெழுதுகிறேன். இந்த
ஸமயத்தில் சுருதிஸ்மிருதிகள் பிரமாணங்களுக்குள் முக்கியமான
பிரமாணம் அவைகளின் தாத்பரியத்திற்கு விருத்தமான யுக்திகள்
ஆபாஸங்கள், தர்மாதர்ம விஷயத்தில் யுக்தியின் அபேட்சையில்லை
என்பதைத் தீர்மானமாக வைத்துக்கொண்டு எப்படிப் பிராசீனர்
களாலே போஜனாதிகாரியங்களுக்குச் சாஸ்திரீயமான உபபத்தி

யானது நிரூபிக்கப்பட்டிருக்கிறதோ அதை என் புத்திக்கு எட்டினவரையில் சங்கிரகமாக எழுதுகிறேன்.

அதில் போஜனத்திற்கும் பசி அடங்குவது மாத்திரம் பலமில்லே. அதுமாத்திரம் பலமாக இருந்தால் தேசகாலாநியமாதிஅபேட்சையில்லாமல் மிலேச்சர்களோடும்புசிக்கலாம் அப்படிப் பசி அடங்குவது மாத்திரம் பலமென்று ஒருவரும் சொல்வதாகத் தெரியவில்லே. ஆனுல் பசி அடங்குவதுடன் பிந்திதொந்திரவுகள் ஏற்படாமலிருக்க வேணுமென்றுதான் ஆகாரத்திலும் பானத்திலும் நியமம் ஆவசியகமென்றும், நியமம் இல்லாதவரையில் ரோகாதிகள் ஏற்படுமென்றும் சொல்கிருர்கள் அதினுல் குளிர்ந்த ஜலத்தினுல் தாகம் அடங்குவதாயிருந்தாலும் வெந்நீர்தான் சாப்பிடவேணுமென்றும் இந்த விதமான ஆகாரம்தான் புசிக்கவேணுமென்றும் தேசங்களின் சீதோஷ்ண ஸ்திதியை அனுசரித்தோ ருதுக்களின் மாறுதலே அனுசரித்தோ நியமங்கள் எல்லோராலும் அங்கீகரிக்கப்படுகின்றன. எந்த விதமான ஆகாரத்தை எந்த காலத்தில் எந்த இடத்தில் எந்தப்பிரகாரம் செய்தால் ரோகத்தினுல் சங்கடம் ஏற்படாமலிருக்குமோ அந்த நியமம் எங்கும் ஏற்பட்டிருக்கிறது. அகாலபோஜனமோ 'அதிபோஜனமோ நாக்கின் ருசிக்காக ரோகவிருத்திக்கி ஹேதுவான பதார்த்தங்களேப் புசிக்கிறதோ இவையாவும் அத்தியந்தம் அனுசிதமென்பது எல்லோரும் ஒப்புக்கொண்டது நியமம் அநாவசியகமென்று சொல்கிறவர்களும் முடிவில் நியமத்தை அனுஷ்டிக்கிறவர்களாகவே இருக்கிருர்கள். எப்படி யென்றுல் அவர்களும் பசி சமயத்தில் ரோகத்தை விருத்திசெய்யாத ஆஹாரத்தை அபேட்சிக்கிருர்களே தவிர அஜீர்ணத்தை யுண்டுபண்ணக்கூடியதாயும் பித்தத்தை விருத்தி செய்யக்கூடியதாயும் இருக்கும் ஆகாரங்களே அபேட்சிக்கிறதில்லே. குஷ்டம் முதலிய மகாரோகங்களினுல் பீடிக்கப்பட்டவர்களோடு சேர்ந்து சாப்பிடவோ அவர்களால் தொடப்பட்ட அன்னத்தைப் புசிக்கவோ சம்மதிக்கிறதில்லே. ஆகையால் எந்தவிடத்திலும் இன்னவிதமான ஆகாரம் இன்னுரோடு சேர்ந்துதான் புசிக்கிறதுஎன்கிறநியமம் ஏற்பட்டுத்தானிருக்கிறது. வைத்தியர்களால் சொல்லப்படுகிற பத்தியமென்பதற்கும் நியமத்தில்

தான் முடிவு நியமத்திற்கு ஹானிவந்தால் சரீரம் வியர்தியால் பீடிக்கப்படும் விஜாதீயர்களோடு சேர்ந்து புசிக்கிறவர்களுக்கும் சேர்ந்து புசிக்க எத்தனம் செய்கிறவர்களுக்கும் ரோகஹேது வாக இல்லாத ஆஹாரம்தான் செய்ய வேணுமென்று அவ்வளவு வரையில் நியமம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனால் அவர்களுக் குச் சுருதி ஸ்மிருதிகளில் பிராமாணிய புத்தி இல்லாததினால் தங் கள் புத்திக்கி ஆவசியமாகத் தோன்றுகிற நியமத்தை அனுஷ்டிக் கிறார்கள். சுருதி ஸ்மிருதிகளின் பிராமாணியத்தில் சிரத்தையுள் ளவர்கள் அவைகளில் போஜனாதி விஷயமாக எந்த நியமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அந்த நியமங்களைத் தவராமல் அனுஷ்டிக்க வேண்டியது ஆவசியகம் அப்படி அனுஷ்டித்தால் சரீரத்தின் ஆரோக்யமும் மனதின் தெளிவும் உண்டாகும். நிய மத்தை அனுஷ்டிக்காதவரையில் நியமாதிக்கிரமத்தினால் ஏற்படும் பாபத்தினால் மனம் தமோமயமாக ஆகிநிகிருஷ்டமான ஜன்மா ஏற்பட்டு கோரமான துக்காநுபவம் உண்டாகும். அந்த நிலமை ஏற்படுமென்பது அல்பபுத்தியுள்ள நமக்கு இப்பொழுது அறிய முடியாமலிருந்தாலும் அதீந்திரியமான அர்த்தத்தைத் தெரிவிக்க வந்த சாஸ்திரத்தினாலே போதிக்கப்பட்டது, ஒருக்காலும், வித்தி யாசமாகாது என்கிறநிச்சயத்துடன் சாஸ்திரீய நியமங்களோடு போஜனாதிகளில் பிரவிருத்திக்கிறார்கள். இன்னம் சாஸ்திரியங் களில் எந்த ஆகாரங்கள் நிஷேதம்செய்யப்பட்டிருக்கின்றனவோ அந்த ஆஹாரங்களை ஸ்வீகரித்தால் மனம் மாறுதலை அடைகிறது எல்லாருக்கும் பிரசித்தம். ஆஹார தோஷத்தினாலேயே புத்திக் குக்கலக்கம் உண்டாகி சிரமப்படுகிறவர்களை நாம் பார்க்கிறோம். புத்திக்குப் பிரமம் உண்டானால் ஒரு காரியமும் நடக்காதென்கிற நிச்சயத்தின் பேரிலேயே முந்தி நடந்த ஜர்மயுத்தத்தில் குளிர் ச்சியான தேசத்தில் உஷ்ணமானபானம் ஆவசியகமாக இருந்தும் பானத்தினால் புத்திகலங்கினால் நிதானத்தோடு செய்யவேண் டிய காரியங்களுக்குக் கெடுதல் ஏற்படுமென்கிற எண்ணத்தினா லே மத்தியபானம் ஒருவரும் செய்யக்கூடாதென்று இங்கிலாங் தில் நிர்ப்பந்தமாய்த் தடுத்ததே திருஷ்டாந்தம். ஆஹாரதோ ஷத்தினால் புத்திக்கு விநாசம் ஏற்படும். आहारशुद्धौ सत्वशुद्धिः,

என்று சுருதியும் இந்த அர்த்தத்தையே சொல்லுகிறது. ஆகையால் சர்வக்ஞர்களாயும்நிரபேட்சகர்களாயும்காருணியகர்களாயும் இருக்கும் மகரிஷி சிரேஷ்டர்கள். பசியை நிவிருத்தி செய்யக் கூடியதாயும் சரீரபுஷ்டியைக் கொடுக்கக்கூடியதாயும், ரோகத்தை உண்டு பண்ணுதாயும் தமோகுண காரியமான ஆலஸ்யாதிகளையும், ரஜோகுணகாரியமான நிஷித்த விஷய பிரவுருத்திகளையும், அழித்துச்சத்துவகுணகாரியமான சமதமாதிகளை உண்டுபண்ணி மனதிற்குத் தெளிவைஏற்படுத்தக் கூடியதுமான ஆஹாரத்தை யோகசக்தியால் ஸ்மரித்து ஸ்மிருதிகளின் மூலம் லோகத்தில் பிரகாசிக்கச்செய்திருக்கிறார்கள்.

அந்த மகரிஷிகளால் வெளிப்படுத்தப்பட்ட நியமத்தை உபேட்சித்தால்வைத்தியர்களால்விதிக்கப்படும்பத்தியத்தை அனுஷ்டிக்காத நோயாளிக்கு அநர்த்தம் ஏற்படுவதுபோல் அவர்களுக்கு நாகாதி கஷ்டங்கள் நிச்சயம் ஏற்படும். அதிலும் தமோ ரஜோகுணத்தை விருத்திசெய்யும் அம்சங்கள் இன்ன வஸ்துக்களில் இருக்கின்றனவென்பது நம்முடைய திருஷ்டிக்கு விஷயமாகக கூடியதல்ல. மஹரிஷிகளால் எந்த பதார்த்தங்கள் புசிக்கக்கூடாதென்று நிஷேதிக்கப் பட்டிருக்கின்றனவோ, அவைகளில் கெட்ட அம்சங்கள் இருக்கிறதாக நிச்சயம் செய்துகொள்ள வேண்டியது. ரிஷியென்கிற பெயரை கௌரவமாகவே இப்போதும் சிலபேர்களுக்கு குடுத்து கொண்டாட ஆசைப்படும் போது அந்தப் பதங்களுக்கு முக்கியார்த்த பூதாளானமஹான்களுடைய வசனங்களில் எது நமக்குசிரேயஸ்ஸைக்கொடுக்குமென்று வளிப்படுத்தப் பட்டிருக்கிறதோ அதில் மாத்திரம் துவேஷம் வகிக்க ஒரு காரணத்தையும் காணோம். சுருதிஸ்மிருதிகளில் நிஷேதிக்கப்பட்ட கள்குடி முதலியது. புத்தியைக்கொடுக்குமென்பது அனுபவ சித்தம். இதுபோலவே நிஷேதிக்கப்பட்ட எல்லா ஆஹாரமும் புத்தியைக் கெடுத்துவிடுமென்பது நிச்சயம். ஆனால் சில பதார்த்தங்களில் இருக்கும் தோஷங்கள் ஸூக்ஷ்மமாக இருப்பதினால் சீக்கிரம் அறியமுடியாது. அதிக காலம் சேவிப்பதினால் அந்ததோஷம் விருத்தியாகி புத்திக்குமாறுதலைக் கொடுத்து நிகிருஷ்ட ஜன்மத்தை அடையும்படிசெய்து அநர்த்தத்தை விளை

விக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த தாத்பர்யத்தையே

विहितस्याननुष्ठानात् निन्दितस्य च सेवनात् ।
अनिग्रहाच्चेन्द्रियाणां नरः पतनमृच्छति ॥

யென்று ஸ்மிருதி தெரிவிக்கிறது. நிஷித்த கர்மாவைச் செய்தால் பதநம் தமோமய மிருகாதி ஜன்மாவை அடைகிறான் என்று அர்த்தம். இன்னம் துஷ்டமான ஆஹாரத்தைப் புசித்தால், ஆயுஸுக்கு ஹாநி ஏற்படுமென்பது

आलस्यादन्नदोषाच्च मृत्युर्विप्रान् जिघांसति ।

என்னும் வசனத்தால் வெளிப்படுகிறது. ஆகையால் துஷ்டமான ஆஹாரம் தள்ளத்தகுந்தது. சாஸ்திரீயமான நியமத்தை அவலம்பித்து ஆஹாரம் செய்ய வேண்டியதென்பதில் சந்தேகமேயில்லை. இனிமேல் ஆஹாராதிகளின் தோஷங்கள் எத்தனைவிதம். விஜாதீயர்களோடு போஜனம் செய்தால் எப்படி ஆஹாரத்திற்கு தோஷம் ஏற்படுமென்கிற விஷயத்தை விசாரிப்போம்.

சிலபதார்த்தங்கள் ஜாதி. அதாவது பிறப்பினாலே தோஷமுள்ளன. அவையான: வெங்காயம் முதலியவைகள்: சில பதார்த்தங்கள் கிரியையினால் தோஷமுள்ளவைகள். நாய், சூத்திரன் முதலியவர்களால் பார்க்கப்பட்டவை. சில பதார்த்தங்கள் காலத்தினால் துஷ்டங்கள் பழயது முதலியவை. சிலதுகள் ஸம்ஸர்க்கத்தினால் துஷ்டங்கள். கேச கீடாதிகளுடன் பக்வமானவைகள் மத்தியம் முதலியவைகளின் சம்பந்தம் உள்ளவைகள். சிலவைகள் பாவதுஷ்டங்கள். அதாவது சந்தேகத்திற்கு ஆஸ்பதமாய் மனதுக்குத்திருப்தியில்லாதவைகள். இவைகளெல்லாம் தள்ளத்தகுந்தவைகளென்று

जातिदुष्टं क्रियादुष्टं कालाश्रयविदूषितम् ।
संसर्गाश्रयदुष्टं च सुहृल्लोकं स्वभावतः ॥ एतन्नभक्षयेद्धीमान्

யென்னும் வசனம்சொல்லுகிறது. இன்னும் ஆஹாரகாலங்களில் சூத்திராதிகள் திருஷ்டியில் பட்டால் எல்லையில் இருக்கும்

ஆஹாரத்தை புசிக்கக் கூடாது. அப்படித் தவருதலாகப் புசிதால் புசித்த அந்நத்தைக் கக்கிவிட்டு மூன்று நாள் உபவாசம் இருக்கவேணுமென்று

उदक्यामपि चण्डाळं श्वानं कुक्कुटमेव च ।
भुञ्जानो यदि पश्येत्तु तदन्नं तु परित्यजेत् ॥
चण्डाळं पतितं प्रेतं श्वशूद्रादीन् रजस्वलाम् ।
एतान्निरीक्ष्य भुञ्जानो वमित्वोपवसेत्र्यहम् ॥

(தொடரும்)

சிவராமகிருஷ்ணசாஸ்திரி,
மாயவரம்.

---

ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடாதிபதி ஜகத்குரு பாதாரவிந்தத்திற்கு, ஸ்ரீகாரியம் ஏஜண்டுமூலமாக, சேங்காலிபுரம் பஜனைதாஸர்கள் நமஸ்கரித்துஎழுதிக்கொண்டது

ஸ்ரீ மடத்திய 20—11—25 உள்ள ஆசீர் வாதக்கடிதம் ஸரியான ஸமயததில் எங்கள் கைக்கு கிடைத்தது. இதினால் எங்கள் கோஷ்டி மேன்மேலும் வ்ருத்தியாக வேண்டுமென்றும், எங்கள் கொள்கை உலகெங்கும் பரவவேண்டுமென்றும், மனப்பூர்வமாக கடாக்ஷித்து எங்கள் பரமாசாரியார் கிருபை புரிந்தார்போலும்.

தயவு செய்து வருஷக்கொண்டாட்டத்தின் கால அட்டவணை (22—11—25) யை எங்கள் குருவின் பாதகமலங்களிற்கு தெரியப்படுத்த கேட்டுக்கொள்ளுகிறோம்,

21—11—25ல் சாயந்திரம் மணி 6–15 முதல் 8–30 முடிய பஜனை நடைபெற்றது. 22–11–25ல் காலை 8 மணி முதல் 12-30 முடிய பூஜையும், பஜனையும் நடைபெற்றது. பிறகு ப்ராம்மண ஸந்தர்ப்பணம் நடந்தது. ஸாயந்திரம் மணி 5 முதல் 9–45 வரையில், மகா-ா-ஸ்ரீ ஸப்ஜட்ஜ் K. S. ராமஸ்வாமி சாஸ்திரியள் அவர்கள் அக்ராசனத்தின்கீழ் அடியில் வருமாறு நடைபெற்ற

விஷயங்களாவன:— (1) பிரும்மஸ்ரீ பண்டிதர் K. வைத்தினாத சாஸ்திரியள் அவர்களால் அக்ராசனாதிபதிக்கு நல்வரவு, (2) மகா-ா-ஸ்ரீ S. V. நடராஜ அய்யர் அவர்களால் ஸ்ரீ மடத்திய ஆசீர்வாதக் கடிதமும், மற்றைய நண்பர்கள் கடிதங்களும், வாசித்தல், (3) மகா-ா-ஸ்ரீ K. S. வெங்கட்டராமய்யர் அவர்களால் பஜனை கோஷ்டியின் வருஷாந்திர அறிக்கை, (4) S. V. நடராஜ அய்யரால் "பஜனையின் அவச்யம்" என்பது பற்றி உபந்யாசம், (5) பிரும்மஸ்ரீ K. வைத்தினாத சாஸ்திரியள் அவர்களால் "சிவனார் மனங்குளிர" எனும் திருப்புகழ் பாடலுக்கு அர்த்தம், (6) அக்ராசனாதிபதியின் முடிவுரையும், பஜனையின் பெருமையும், (7) மகா-ா-ஸ்ரீ V. பஞ்சாபகேச அய்யர் அவர்களால் அக்ராசனாதிபதி அவர்களுக்கும், வந்திருந்த மற்றைய கிராமத்தினர்களுக்கும் பஜனை கோஷ்டியின் சார்பாக வந்தனம் கூறல்.

21—11—25, 22—11—25 இவ்விரண்டு தின இரவிலும், தேதியூர், பாலையூர், சித்தன்வாழூர், கோனேரிராஜபுரம் முதலிய இடங்களிலிருந்து வந்திருந்த பஜனை கோஷ்டிகளினால் ஸ்ரீகிருஷ்ண உத்ஸவம் நடைபெற்றது.

முடிவில், எங்கள் பஜனை கோஷ்டிக்கும், மற்றுமுள்ள எல்லா தேசத்திய பஜனை கோஷ்டிகளிற்கும், யாதொரு இடையூறும்நேரிடாது, கோஷ்டிகள் மேன்மேலும்வ்ருத்தியாக எங்கள் ஸ்ரீஜகத்குருமஹாஸ்வாமிகள் மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கநிரம்பவும் நமஸ்கரித்துகேட்டுக் கொள்ளுகின்றனம்.

பஜனை தாஸர்கள்.

P. S.

23—11—25ல் காலை 6மணிக்கு இவ்வருஷபூர்த்திக்கொண்டாட்டத்தின் முடிவு சமயத்திற்கு எங்கும் ப்ரகாசமாயும் உணர்ச்சி ஸ்வரூபமாயும் இருக்கும் ஓர் கடவுள் மூன்று பக்தர்கள் மூலமாக ஏககாலத்தில் ஆவிர்பவித்து எங்கள் கொள்கையை ஒப்புக்கொண்டார். எனும் சந்தோஷசமாசாரத்தை ஸ்ரீ ஜகத்குருபாதாரவிந்தத்திற்கு தெரியப்படுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

# ஓர் வேண்டுகோள்.

இப்பூவுலகின்கண் பூலோக கைலாஸமெனும் பெயர்வாய்ந்த திருவையாறு என்னும் க்ஷேத்திரத்திற்கருகில் காவேரியின் வடகரையில் அம்மாளக்கிரகாரம் என்னும் கிராமத்தில் தஞ்சை தேவஸ்தானம் கமிட்டியார் விசாரணைக்குள்பட்ட ஒருராஜா தர்மபாடசாலை இருப்பதை ஆரிய நேயர்கள் கண்டிருக்கலாம். அவ்வித்தியாசாலையில் கொஞ்ச காலமாக, ஷை பாடசாலை உபாத்தியாயர்களும் அங்குள்ள அதிகாரிகளும், வித்யார்த்திகளைப் "பிரதிதினமும் காலையில் ஸ்நானம், ஸந்தியாவந்தனம், ஸமிதாதானம், **ब्रह्मयज्ञ प्रश्नम् ब्रह्मयज्ञम्** முதலிய நித்யகர்மாக்களை விதிவழுவாது செய்ய வேண்டும்" என்று விதித்திருப்பதையும், அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்துவருவதையும் பற்றி இங்குக் குறிப்பிடவேண்டியது அவசியமாகும். இவ்விதம் இவர்கள் ஏற்படுத்தியது மற்றுமுள்ள பாடசாலை வித்யார்த்திகளையும் இதில் தூண்டுவதுபோலாகும். இவ்விதம் ஒவ்வொரு பாடசாலைகளிலும் அங்குள்ள அதிகாரிகள் கவனித்தார்களேயானல் நமது பிராசீன வித்யாப்பியாசமுறைகள் நிரம்பவும் மேன்மையடையக் காரணமாகும். ஸ்ரீஜகத்குரு பரமாசாரியாள் அவர்களுடைய கிருபாகடாக்ஷத்தினல் ஆரம்பித்த கர்மாவானது நிர்விக்னமாக நடக்குமென்று எதிர்பார்க்கிறோம். ஷை ஸமிதாதானம்முதலியஸத்கிரியைகள் சாச்வதமாக நடக்கவேண்டியதற்காக ஸ்வல்பத் தொகைவேண்டியதை முன்னிட்டு அவ்விடமுள்ள அதிகாரிகள் தர்மபிரபுக்களாகிய கமிட்டியாரவர்களுக்கு மனுச்செய்து கொண்டிருக்கிறார்கள். ஷை கமிட்டியாரவர்கள் ஷை தர்மத்துக்குரிய ஸ்வல்பத்தொகையைக்கொடுத்து ஷை கார்யங்கள் சாச்வதமாக நடக்க வேண்டும் என்பதைக் கவனிப்பார்களென்று எதிர்பார்க்கப் படுகின்றது.

K. R. வைத்தியநாதசாஸ்திரியள்,

குறிப்பு:—இந்த வித்யாசாலையில் நடைபெறுவதைக்கேழ்க்க மிகவும் திருப்தியாயிருக்கிறது இவ்விதம் ஒவ்வொரு ஸம்ஸ்கிருத வித்யாசாலைகளிலும், அந்தந்த அதிகாரிகள் தம் தம் கடமையைச் சரிவர நடத்துவார்களாகில் கொஞ்ச காலத்தில் நம் ஸநாதந தர்மத்திற்கு தற்காலம் நேர்ந்திருக்கும்குறை நிவிர்த்தியாய் விடுமென்று தைர்யமாய்க்கூறலாம். ஸர்வேசுவரரானஸ்ரீபகவான் ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்கு இவ்விதநற்கார்யத்தில் முயற்சியைக் கொடுக்கும்படி பிரார்த்திக்கிறோம்.

ஆர்யதர்மம் உப்பத்திராதிபர்.